055

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**கல்விப்பீடம்**

**விசேட தேவைகள் சார் கல்வியில் சிறப்புக் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024**

**மட்டம் - 05**

**SNU5237/ESU3137 – விசேட கல்விசார் கல்வின் சமூகவியல் அடிப்படைகள்**

**காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

**திகதி:- 19.01.2025** **நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30**

**பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.**

**பகுதி I**

1. கலாசாரத்தின் **இரண்டு** (02) பிரதான குணாதிசயங்களைக் குறிப்பிடுக.
2. விருத்தி சமூகமயமாக்கல் செயன்முறை என்பதனால் யாது கருதப்படுகின்றது?
3. "விழுமியம்" என்ற பதத்தினை **ஒரு** (01) எடுத்துக்காட்டுடன் சுருக்கமாக விளக்குக.
4. ஒரு கருக்குடும்பம் மற்றும் ஒரு விரிகுடும்பத்தை வேறுபடுத்துக.
5. 1965இல் பார்சன்ஸ் (Parsons) பரிந்துரைத்த குறிப்புக் குழுக் (Reference Group) கோட்பாட்டைச் சுருக்கமாக விளக்குக.
6. இலங்கைக் கல்வி முறைமையில் உள்ளடங்கற் கல்வின் அவசியத்தைச் சுருக்கமாக விளக்குக.
7. சமூக அடுக்கமைப்பின் **நான்கு** (04) அடிப்படை ஒழுங்குமுறைகளைப் பெயரிடுக.
8. வெகுஜன ஊடகம் என்ற பதத்தினை உங்கள் சொந்த மொழி நடையில் வரைவிலக்கணப்படுத்துக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

**பகுதி – II**

**9. i.** நியமங்கள் என்ற பதத்தினால் நீங்கள் எதனைக் கருதுகின்றீர்கள்?

**(04 புள்ளிகள்)**

**ii.** சமூகத்தில் நியமங்களை மாற்றுவதைப் பாதிக்கும் **மூன்று** (03) காரணிகளைக் குறிப்பிடுக.

**(06 புள்ளிகள்)**

**iii.** ஒரு சமூகத்தில் நியமங்களை அமுல்படுத்துவதற்கு "நேர்மறை" மற்றும் "எதிர்மறை" தடைகளின் (Striction) முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்க.

**(10 புள்ளிகள்)**

**10. i.** 1949 இல் மேர்டொக் (Murdock) இனால் முன்மொழியப்பட்ட குடும்பச் செயற்பாட்டின் **நான்கு** (04) அடிப்படை தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக.

**(04 புள்ளிகள்)**

**ii.** சமூகமயமாக்கற் செயன்முறையைப் பாதிக்கும் **இரண்டு** (02) குடும்பம் தொடர்பான காரணிகளைச் சுருக்கமாக விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** போம்றின்ட் (Baumrind) – 1967 இல் பெற்றோரின் நடத்தைக்கு மிகவும் விளைதிறனுள்ள பெற்றோருக்குரிய பாங்கின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.

**(10 புள்ளிகள்)**



29

**11. i.** எதிர்ப் (Counter) பாடசாலை கலாசாரத்தை வரைவிலக்கணப்படுத்துக.

**(04 புள்ளிகள்)**

**ii.** எதிர்ப் பாடசாலைக் கலாசாரத்தின் **மூன்று** (03) அம்சங்களைக் குறிப்பிடுக.

**(06 புள்ளிகள்)**

**iii.** பாடசாலையில் விசேட தேவைகள் உள்ள குழந்தைகளுக்குச் சகபாடி சமூகமயமாக்கலின் முக்கியத்துவத்தை **இரண்டு** (02) காரணிகள் மூலம் மதிப்பிடுக.

**(10 புள்ளிகள்)**

**12. i.** பாடசாலைக் கலாசாரம் என்ற எண்ணக்கருவினைச் சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** ஏன் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளின் கல்வி வாய்ப்பு கட்டுப்படுத்தப்பட்டது (Restricted Code) என்பதை **இரண்டு** (02) காரணிகள் மூலம் சுருக்கமாக விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** இலங்கைப் பாடசாலைகளில் சமூகமயமாக்கற் செயன்முறையில் இயலாமை உடைய மாணவர்கள் எதிர்கொள்ளும் **இரண்டு** (02) பிரச்சினைகளை இனங்கண்டு, அப்பிரச்சினைகளை சமாளிப்பதற்கான ஆலோசனைகளை வழங்குக.

**(10 புள்ளிகள்)**

**13. i.** சமூகவகுப்பு என்ற பதத்தினை வரைவிலக்கணப்படுத்துக.

**(04 புள்ளிகள்)**

**ii.** ஒவ்வொன்றுக்கும் உதாரணத்துடன் ஒரு தலைமுறை பெயர்ச்சி மற்றும் பல்தலைமுறை பெயர்ச்சி ஆகியவற்றை வேறுபடுத்துக.

**(06 புள்ளிகள்)**

**iii.** இலங்கையின் கல்வி முறைமையானது மேல்நோக்கிய சமூக பெயர்ச்சிக்கு துணை புரிகிறதா என்பதை விமர்சன ரீதியாக மதிப்பிடுக. குறைந்தது **இரண்டு** (02) நேர்மறை மற்றும் **இரண்டு** (02) எதிர்மறை வாதங்களை முன்வைக்குக.

**(10 புள்ளிகள்)**

**14. i.** ஊடக எழுத்தறிவு என்ற பதத்தினை வரைவிலக்கணப்படுத்துக.

**(04 புள்ளிகள்)**

**ii.** விசேட தேவைகள் உள்ள குழந்தைகளின் சமூகமயமாக்கலை ஊடகங்கள் எவ்வாறு எதிர்மறையாக பாதிக்கலாம் என்பதை விளக்குக. குறைந்தது **மூன்று** (03) காரணங்களைக் குறிப்பிடுக.

**(06 புள்ளிகள்)**

**iii.** மேலே குறிப்பிட்டுள்ளபடி (**14.ii**), விசேட தேவைகள் உள்ள குழந்தைகளின் சமூகமயமாக்கலில் ஊடகங்களின் எதிர்மறையான விளைவைக் குறைப்பதற்கான வழிகளைப் பரிந்துரைக்குக.

**(10 புள்ளிகள்)**

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*



30